**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C. 31/2025**

**Prosecution Witness : 9**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. பாலசுப்பிரமணியன்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. பூமிநாதன்** | **Calling** | : | **சார்பு ஆய்வாளர், வேடசந்தூர் காவல் நிலையம்.** |
| **Village** | : | | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **34** |
| | | | **Dated** | : | **07.04.2026** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**எதிரி ஆஜரில்லை, பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

அ.சா. 9 (பட்டியல் சாட்சி 11), **திரு. பாலசுப்பிரமணியன்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை :–</u>**

நான் தற்போது திண்டுக்கல், வேடசந்தூர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 23.05.2024 ம் தேதி நான் திண்டுக்கல் தாலுகா காவல் நிலையத்தில், நிலைய ஆஜரில் இருந்தபோது, திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலைப் பெற்று, மேற்படி மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த திண்டுக்கல், மேட்டுப்பட்டி, எம்ஜிஆர் நகர், விஸ்தரிப்பு அக்னி லிங்கேஷ்வரன் கோவில் அருகே

வசித்து வரும் நீலகண்டன் என்பவர் பலத்த காயத்துடன் மயக்க நிலையில் இருந்ததால், நீலகண்டன் மனைவி சுபாஷினி என்பவரை விசாரித்து, அவர் கொடுத்த புகாரைப் பெற்று, திண்டுக்கல் தாலுகா காவல் நிலையம் வந்து, நிலைய குற்ற எண். 346/2024, பிரிவுகள் 343, 294(b), 307 இ.த.ச. வாக வழக்கு பதிவு செய்தேன். **என்னிடம் காட்டப்படும் புகார் மனு பட்டியல் சாட்சி – 1 என்னிடம் கொடுத்ததுதான். அது அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. முதல் தகவல் அறிக்கையின் அசலையும், வாதியின் புகாரையும் இணைத்து திண்டுக்கல் நீதித்துரை நடுவர் எண். 1 அவர்களுக்கு அனுப்பி வைத்தும், மேலும் இவ்வழக்கு விசாரணைக்காக திண்டுக்கல் தாலுகா காவல் ஆய்வாளர் அவர்கள் தனி அலுவலாக வெளியே சென்ற காரணத்தினால் அன்று பொறுப்பு காவல் ஆய்வாளராக இருந்த, அம்பாத்துரை காவல் வட்டம் அவர்களின் விசாரணைக்கு வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

முதல் தகவல் அறிக்கை மற்றும் புகாரில் சம்பவம் நடந்த நேரம் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. அசா. 1 க்கு தகவல் கிடைத்த நேரத்தையே சம்பவம் நடைபெற்ற நேரமாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார் பற்றி பொதுநாட்குறிப்பில் எதுவும் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். புகார் மனு காலதாமதமாகக் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சம்பவம் நடைபெற்று 5 மணி நேரம் காலதாமதமாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான், அதை காலதாமதம் என்று கருத முடியாது. காயம்பட்ட நபரை சிகிச்சைக்கு கொண்டு போய் சேர்த்து, அதன்பின் புகார் மனு

பெறப்பட்டது.  சம்பவத்திற்கு பயன்படுத்தியதாகச் சொல்லப்படும் ஆயுதத்தின் அளவு, வடிவம் எதுவும் புகார் மனுவில் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்து 5 நாட்கள் கழித்து தான் முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு வந்துள்ளது என்றால் சரியல்ல. எழுதாத வெள்ளைத்தாளில் கையொப்பம் மட்டும் பெறப்பட்டு, புகார் மனு காவல் நிலையத்தில் வைத்து உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court on 07.04.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA
Digitally signed by V DEEPA
Date: 2026.04.07 16:08:16 +0530

Chief Judicial Magistrate,
Dindigul.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C. 31/2025**

**Prosecution Witness : 10**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திருமதி. அனிதா** | **Caste** | : | |
| **Husband's Name** | : | **திரு. ஜோசப் ஆன்டாயின் அன்புராஜ்** | **Calling** | : | **உதவி பேராசிரியர், கண் மருத்துவத்துறை.** |
| **Village** | : | | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **விருதுநகர்** | **Age** | : | **50** |
| | | | **Dated** | : | **07.04.2026** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**எதிரி ஆஜரில்லை, பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

அ.சா. 10 (பட்டியல் சாட்சி 10), **திருமதி. அனிதா** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை :–</u>**

நான் தற்போது விருதுநகர் அரசு மருத்துவமனை, கண் மருத்துவத்துறையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். நான் 23.05.2025ம் தேதி மாலை 06.43 மணியளவில் திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவில் மருத்துவராக பணிபுரிந்தபோது, 52 வயது மதிக்கத்தக்க நீலகண்டன், த/பெ. ஆறுமுகம், மேட்டுப்பட்டி, பேகம்பூர், திண்டுக்கல் என்பவர் தன்னை ஒரு தெரிந்த நபர் கத்தியால் தாக்கியதாக 108 வாகனத்தில் மூலம் அழைத்து

வரப்பட்டார். அவரை பரிசோதனை செய்தபோது, அவர் அரைமயக்கத்தில் இருந்தார். அவருக்கு Blood Pressure மிகவும் குறைவாக இருந்தது. ஆக்ஸிஜன் அளவும் குறைவாக இருந்தது. அவருக்கு ஏற்பட்ட காயங்கள்

1) வெட்டுக்காயம் இடது தோள்பட்டையில் 7x2x1 செ.மீ. என்ற அளவில் இருந்தது.

2) வெட்டுக்காயம் நெஞ்சுப்பகுதியில் 3x1x1 செ.மீ. என்ற அளவில் இருந்தது.

3) வெட்டுக்காயம் மேல் வயிற்றுப் பகுதியில் 4x2x1 செ.மீ.என்ற அளவில் இருந்தது.

4) வெட்டுக்காயம் இடது கன்னத்தில் 3x1x1 செ.மீ. என்ற அளவில் இருந்தது.

5) வெட்டுக்காயம் மேல்முதுகு பகுதியில் 4x2x1 செ.மீ. என்ற அளவில் இருந்தது.

அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளிக்கப்பட்டது. மேலும் அவருக்கு ஏற்பட்ட காயங்கள் கொடுங்காயங்கள் என்று அவருக்கு சிகிச்சை அளித்த அறுவைச் சிகிச்சை நிபுணரின் கருத்துரைப்படி சான்றளித்தேன். **மேற்படி விபத்து பதிவேட்டுடன் இணைந்த காயச்சான்றிதழ் அ.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-**

காயம்பட்ட நபரை அடையாளம் காட்டிய நபரை ஆய்வாளர் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், அவர் 108 ஆம்புலன்ஸ் மூலமாக கொண்டு வந்து சேர்க்கப்பட்டதால், தனியாக காயம்பட்ட நபர் என்று அடையாளம் காட்ட வேண்டியதில்லை. மேற்படி காயங்கள் இருசக்கர வாகனத்தில் சென்று தவறி விழுந்தால்

ஏற்படுவதற்கு வாய்ப்பு உள்ளது என்றால் சரியல்ல. காயம்பட்ட நபரை மருத்துவமனைக்கு அவருடைய உறவினர்கள் யாரும் அழைத்து வரவில்லை என்றால், சுபாஷினி என்பவர் 108 ஆம்புலன்ஸில் அழைத்து வந்தார். மேற்படி சுபாஷினி என்பவர் காயம்பட்ட நபருக்கு யாரால் காயங்கள் ஏற்பட்டது என்று பெயர் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், தெரிந்த நபர் தாக்கியதாகச் சொல்லியுள்ளார். யார் சொல்லி தெரிந்த நபர் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால், அந்த விபரம் குறிப்பிடப்படவில்லை. சம்பவம் நடந்த நேரம் 06.15 P.M. என்று விபத்து பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். காயம்பட்ட நபர் கத்தியால் தாக்கப்பட்டால் என்பதை யாரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டேன் என்பதை ஆய்வாளர் விசாரணியில் நான் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால், மேற்படி விபத்து பதிவேட்டில் உள்ள விபரங்களை மட்டும்தான் சொல்ல முடியும். காயம்பட்ட நபருக்கு வேறு ஆயுதங்களாலும் மேற்படி காயங்கள் ஏற்படலாம் என்றால், கூர்மையான ஆயுதங்களால் ஏற்பட வாய்ப்பு உள்ளது. ஆய்வாளர் சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்ட ஆயுதத்தைக் காட்டி, அதன் மூலமாக காயங்கள் ஏற்பட்டுள்ளதா என்பதை விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

Taken down by me/before me in open court on 07.04.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA
Digitally signed by V DEEPA
Date: 2026.04.07 16:08:25 +0530

Chief Judicial Magistrate,
Dindigul.